# பாடம் – 7
# வங்கியியல்- V

## (BANKING)

Prepared by


# M.Muthu Selvam

M.Sc.,M.Com.,M.Ed.,M.Phil

PG.Asst., (Commerce)

MLWA.Hr.Sec.School

Madurai -1

Mail Id : dhakshina29@gmail.com

Mobile No : 98421 04826

# 1. பொதுக்கீறலிடுதல் :

## General crossing




- அண்டு கம்பெனி (& Compony) அல்லது அதன் குறுக்கம் உள்ளடங்கிய இரண்டு குறுக்குக் கோடுகளுடன் அல்லது வெறும் இரண்டு குறுக்குக் கோடுகளுடன் "மாற்றத்தக்கதல்ல" என்ற வார்த்தையுடனோ அல்லது இவ்வார்த்தை இல்லாமலோ உள்ள காசோலை பொதுக்கீறலிட்ட காசோலை எனப்படுகிறது.

# பொதுக்கீறலிடுதலின் முக்கியத்துவம்:
## Significance of general Crossing

- 1. ஒரு காசோலை பொதுக்கீறலிடப்பட்டதாக இருந்தால், வங்கியர் அதற்கு நேரடியாக பணம் தரக்கூடாது.
- இன்னொரு வங்கியருக்கு மட்டுமே பணம் தருமாறு பணம் தரும் வங்கியர் பணிக்கப்படுகிறார்.




# பொதுக்கீறலிடுதலின் முக்கியத்துவம்:
## Significance of general Crossing





- 2. ஒரு வேளை இக்காசோலையானது தொலைந்த பின்னரோ அல்லது திருடப்பட்ட பின்னரோ பணமாக்கப்பட்டிருந்தால், அப்பணத்தைப் பெற்றவரை சுலபமாகக் கண்டு பிடிக்க முடியும்.
- அதனால் கீறலிடுதல் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

# 2. சிறப்பு கீறலிடுதல்:
## Special crossing

- வங்கியரின் பெயர் காசோலையில் குறிக்கப்பட்டிருந்தால் அது சிறப்பு கீறலிடுதலாகும்.
- ஒரு வங்கியரின் பெயர் காசோலையில் "மாற்றத்தக்கதல்ல" என்ற வார்த்தைகளுடனோ அல்லது இந்த வார்த்தை இல்லாமலோ குறிப்பிடப்பட்டிருந்தால் அக்காசோலை சிறப்பு கீறலிடப்பட்டதாகக் கருதப்படும்.




# 2. சிறப்பு கீறலிடுதல்:
## Special crossing




- காசோலையில் குறிப்பிடப்பட்ட அந்த வங்கியருக்காக மட்டுமே சிறப்பாக கீறலிட்டதாக கருதப்படும்".
- சிறப்பு கீறலிடுதலில் இரண்டு குறுக்குக் கோடுகள் அவசியமில்லை

# சிறப்பு கீறலிடுதலின் முக்கியத்துவங்கள்:
## Significance of special crossing

- 1. இவ்வகை காசோலைக்கு பணம் தரும் வங்கியர் காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கியருக்கோ அல்லது அவரது வசூலிக்கும் முகவருக்கோ பணம் தர வேண்டும். இவ்வகை கீறலிடுதல் மிகவும் பாதுகாப்பானது.


Significance of Special Crossing

1. It is a direction to the paying banker.
2. A special crossing gives more protection the cheque than a general crossing.

Not Negotiable Crossing
A/c Payee Crossing

# சிறப்பு கீறலிடுதலின் முக்கியத்துவங்கள்:
## Significance of special crossing


### Significance of General Crossing

1. The effect of general crossing is that it gives a direction to the paying banker.
2. The direction is that the paying banker should not pay the cheque at the counter.
3. If a crossed cheque is paid at the counter in contravention of the crossing:

- 2. உதாரணமாக ஒருவர், தங்கராசு என்பருக்கு ரூ.5,000/- க்கு சேலம் பாரத ஸ்டேட் வங்கி காசோலை வழங்கும் பொழுது அக்காசோலையில் ICICI Bank Ltd., என்று குறிப்பிட்டிருந்ததாக வைத்துக் கொள்வோம்.


# சிறப்பு கீறலிடுதலின் முக்கியத்துவங்கள்:
## Significance of special crossing

- இதில் பணம் தரும் வங்கியான சேலம் பாரத ஸ்டேட் வங்கி அக்காசோலை தொகையை ICICI வங்கிக்கோ அல்லது அதனது வதூலிக்கும் முகவருக்கோ பணம் தரவேண்டும்.




# பின் எழுதுல் (அ) மேலெழுதுதல் ENDORSEMENT

- மாற்றத்தக்க ஆவணங்களின் பின் பக்கத்தில் பணம் பெறுபவரின் பெயரை எழுதுவதையே பின் எழுதுல் (அ) மேலெழுதுதல் என்கிறோம்.



# பின் எழுதுல் (அ) மேலெழுதுதல் ENDORSEMENT




- காசோலை போன்ற மாற்றுமுறை ஆவணங்களின் மீது பணம் பெறும் உரிமை பெற்ற ஒருவர், தனது இவ்வுரிமையை அவ்வாவணத்தின் பின்புறம் கையொப்பம் இடுவதன் மூலம் பிறருக்கு மாற்றித் தரமுடியும்.

# பின் எழுதுல் (அ) மேலெழுதுதல்
# ENDORSEMENT





- பின்எழுதி கையொப்பமிடுவோரை "மேலெழுதுபவர்" (Endorser) என்றும் அதன் உரிமையை பெறும் நபரை "மேலெழுதப்பட்டவர்" (Endorsee) என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

# மேலெழுதுதலின் வகைகள் :
# KINDS OF ENDORSEMENT

- 1. பெயர் குறிப்பிடாத மேலெழுதுதல் (Endorsement in blank) : பின்எழுதுபவர் யாருக்கு இம்மாற்றுமுறை ஆவணம் மாற்றித்தரப்படுகிறது என்பதை குறிப்பிடாமல், தனது கையொப்பம் மட்டுமே பின்புறம் இட்டால் அதனை பெயர் குறிப்பிடாத திறந்த பின் எழுதல் என்கிறோம்.




# 1. பெயர் குறிப்பிடாத மேலெழுதுதல் (Endorsement in blank) :




- ஆதலால், இவ்வாவணத்தைக் கொணரும் நபருக்கே, அவ்வாவணத்தின் தொகை வழங்கப்படும்.


# 2. முழுமையான அல்லது சிறப்பு மேலெழுதுதல் (Endorsement in full or special endorsement) :

- பின்எழுதுபவர் ஆவணத்தில் கண்டுள்ள தொகையை ஒரு குறிப்பிட்ட நபருக்கோ அல்லது அவரது உத்தரவு பெற்றவருக்கோ பணத்தை தருமாறு பணித்தால் அதற்கு முழுமையான பின்எழுதுதல் என்கிறோம்.




- இதை சிறப்பு பின்எழுதுதல் என்றும் கூறலாம்.
- உதாரணம்: எல்.ராஜன் அல்லது உத்தரவு பெற்றவருக்கு கொடு

# 3. வரையறை மேலெழுதுதல் (Restrictive Endorsement):




- பின்எழுதுபவர் மாற்றுமுறை ஆவணத்தின் உரிமை மாறுதலை வரையறை செய்தால் அவ்வகை பின்எழுதுதலை வரையறை பின்எழுதுதல் என்கிறோம்.
- உதாரணம்: எல். ராஜனுக்கு மட்டும் கொடு


# 4. நிபந்தனை மேலெழுதுதல் (Conditional Endorsement):

- பின்எழுதுபவர் இந்த ஆவணத்தின் மீது பெறும் உரிமையை ஒரு நிபந்தனைக்கு உட்படுத்தி இன்னொருவருக்கு மாற்றம் செய்தால், இதனை நிபந்தனை பின்எழுதுதல் என்கிறோம்.

**3. Conditional Endorsement** – The endorsement to may be preceded by certain condition which should be fulfilled by the endorsee to receive the payment.

> "Pay Ram or Order on the arrival of Sumit at J.P nagar, Mumbai by 30 September,2008.
>
> Sd/-
> B. Chandrasekhar

# 4. நிபந்தனை மேலெழுதுதல் (Conditional Endorsement):




- இம்முறையில் பின்எழுதப்பட்டவர் (Endorsee) அதிலுள்ள நிபந்தனையை பூர்த்தி செய்த பின்னரே அதன் மீதான பணம் பெறும் உரிமையை பெறுகிறார். உதாரணம். இரண்டு மாதங்களுக்குள் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்தால் எல். ராஜனுக்கு கொடு.

# 5. தன் பொறுப்பில்லா மேலெழுதுதல்
## (Sans Recourse Endorsement):


- மாற்றுமுறை ஆவணம் மறுக்கப்படும் போது அதனால் எற்படும் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் வண்ணம், பின்எழுதுபவர் பின்எழுதிக் கொடுத்தலையே தன்பொறுப்பில்லா மேலெழுதுதல் என்கிறோம்.


5. SANS FRAIS ENDORSEMENT

Sans fraise means "*without expense*".

*Endorser doesn't want any expense to be incurred on his a/c on the instrument. That means he is liable for the amount of the instrument only and not liable for any additional expenditrure like noting and protesting charges.*


# 5. தன் பொறுப்பில்லா மேலெழுதுதல் (Sans Recourse Endorsement):




- "என்னிடம் திரும்பவராதே" என்பதே இதன் அர்த்தம். இவ்வார்த்தை மேலெழுதிய பின் சேர்க்கப்படும் வார்த்தையாகும். உதாரணம் : "ராஜனுக்கு கொடு – என்னிடம் வராதே"

# 6. கடமை தவிர் மேலெழுதுதல் (Facultative Endorsement)

- பின்எழுதுபவர் மாற்றுமுறை ஆவணம் மறுக்கப்படும்போது (dishonour) அதற்கான அறிவிப்பு (notice) தனக்கு தேவையில்லை என்று தனது உரிமையை விட்டுக் கொடுத்து பின்எழுதினால், அதுவே அவமறியாதை அறிக்கை தேவையில்லை என்று மேலெழுதுதல் எனப்படுகிறது.
- உதாரணம் : "ராஜனுக்கு கொடு, மறுப்பிற்கான அறிவிப்பு உரிமை விட்டு கொடுக்கப்படுகிறது".


7. Facultative endorsement

- When an endorser expressly gives up some of his rights under the negotiable instrument, the endorsement is called a 'facultative' endorsement.
- For eg, "Pay X or order, notice of dishonour waived" is a facultative endorsement,
- Facultative means optional or not-compulsory.

By-Akansha Kansal

# காசோலை மறுப்பு (Dishonour of Cheque)

- வாடிக்கையாளர்களின் காசோலைக்கு பணமளித்தல் ஒரு வங்கியரின் சட்டபூர்வ கடமையாகும்.
- போதுமான காரணமில்லாமல் ஒரு வங்கியர், தனது வாடிக்கையாளரின் காசோலைக்கு பணம் தர மறுத்தாலோ அல்லது தவறினாலோ, வங்கியர் தகுதியான நல்ல காரணங்களின்றி பணம் தர மறுக்கக்கூடாது.



**பின்வரும் சந்தர்ப்பங்களில் வங்கியர் வாடிக்கையாளரின் காசோலைக்கு பணம் தர மறுக்கலாம்.**


**The following are the circumstances under which a banker can refuse payment of the cheque**

- 1.எழுதியவர் தடைசெய்தால்
- 2.வாடிக்கையாளரின் இறப்பு பற்றிய தகவல்
- 3.வாடிக்கையாளர் புத்திசுவாதீனம் இன்மை
- 4. நொடிப்புநிலை
- 5. நீதிமன்ற உத்தரவு
- 6. ஒதுக்கீட்டு நியமன அறிவிப்பு



## பின்வரும் சந்தர்ப்பங்களில் வங்கியர் வாடிக்கையாளரின் காசோலைக்கு பணம் தர மறுக்கலாம்.

The following are the circumstances under which a banker can refuse payment of the cheque




- 7. அறக்கட்டளை விதிகளை மீறுதல்
- 8. காசோலை கொணர்பவரின் உரிமை குறைபாடு தெரியவரும்போது
- 9. போதிய நிதியின்மை
- 10. பின் தேதியிட்ட காசோலை
- 11. காலாவதியான காசோலை
- 12. கையொப்பம் மாறுதல்

# பின்வரும் சந்தர்ப்பங்களில் வங்கியர் வாடிக்கையாளரின் காசோலைக்கு பணம் தர மறுக்கலாம்.

The following are the circumstances under which a banker can refuse payment of the cheque

- 13. முறைகேடான மேலெழுதுதல்
- 14. எண்ணும் எழுத்தும் மாறும்போது
- 15. திருத்தங்கள்
- 16. காசோலை உருவம்
- 17. வேறு கிளையின் மீது எழுதப்பட்டிருந்தால்




# தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (Automatic Teller Machine)

- தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம், வங்கியின் கட்டிடத்தின் உட்புறத்திலோ அல்லது வெளியிலோ, நாள் முழுவதும் வாடிக்கையாளர் பணத்தை வங்கியின் பெறுவதற்கோ அல்லது செலுத்துவதற்கோ அமைக்கப்பட்ட ஒரு கருவியாகும்.



# தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (Automatic Teller Machine)




- மத்திய கணினியுடன் பொதுதொலைபேசி வலைபின்னல் மூலமாக இணைக்கப்பட்ட ஒரு சிறப்பு அமைப்பு (Specialized Terminal) முறையாகும்.

# தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (Automatic Teller Machine)

- கணக்கு விபரங்கள் அடங்கிய காந்ததுண்டு உள்ளடங்கிய பிளாஸ்டிக் அட்டையை உட்செலுத்தி தனி அடையாள எண்ணை (Personal Identification Number) கொடுப்பதன் மூலம் பல்வேறு வகையான வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கிறது.



# வாடிக்கையாளருக்கு நன்மைகள்:
## Advantages of ATMs to customers

- 1. இது நாள் முழுவதும் சேவை புரிவதால், வங்கி நடவடிக்கை நேரம் (Banking Time) வெகுவாக மிச்சப்படுத்தப்படுகிறது.
- 2.துரிதமான, திறமையான, தவறுகளற்ற சேவை கிடைக்கிறது.



# வாடிக்கையாளருக்கு நன்மைகள்:

## Advantages of ATMs to customers

- 3. வலைப்பின்னல் மூலமாக, அட்டை வைத்திருப்பவர் எந்த இடத்திலிருந்தும் ரொக்கம் மற்றும் பல சேவைகளை பெறலாம்.



4. வங்கியின் எந்த கிளைக்கும் பணத்தை சுலபமாக மாற்றம் செய்யலாம்.

- 5. எந்த நேரத்திலும் பணம் எடுக்கலாம் என்பதால், "எங்கும் கிடைக்கும் வங்கிவசதி" என்றும் கூறலாம்.

# வங்கியருக்கு நன்மைகள்:

## Advantages of ATMs to Bankers

- 1.வங்கியில் வாடிக்கையாளர் கூட்டம் வெகுவாக குறைக்கப்படுகிறது.
- 2. வங்கி வேலை நேரத்தை அதிகப்படுத்துதல் மற்றும் புதிய கிளைகள் திறத்தலுக்கு இது ஒரு மாற்று வழியாகும்.
- இதனால் வங்கியின் நிர்வாகச் செலவுகள் குறைக்கப்படுகிறது.



# வங்கியருக்கு நன்மைகள்:
## Advantages of ATMs to Bankers




- 3. பகுத்தாய்வு மற்றும் புத்தாக்க வேலைகளை வங்கி ஊழியர்கள் கவனம் செலுத்த உதவுகிறது.
- 4. தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் முக்கியமான இடங்களில் நிறுவப்படுவதால், வங்கி வியாபாரத்தின் அளவு அதிகரிக்கிறது.

# வங்கியருக்கு நன்மைகள்:
## Advantages of ATMs to Bankers

- 5. ரொக்கத்தை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதையும் மற்றும் ரொக்கம் கையாளுதலையும் தவிர்க்கிறது.



# கடன் அட்டை (Credit Card):

- இவ்வட்டை வங்கிகளால் வழங்கப்படுகிறது.
- இது ஒரு சிறிய பிளாஸ்டிக் அட்டை.
- இதில் கடன் அட்டை பெற்றவரின் பெயர், அவரின் கணக்கு எண், செல்லுபடியாகும் காலம் ஆகியவை இதன் மீது குறிக்கப்படுகிறது.



# கடன் அட்டை (Credit Card):




- இவ்வட்டையின் பின், அவரது மாதிரி கையொப்பமும் உள்ளது.

இவ்வட்டை வைத்திருப்போருக்கு, இவ்வட்டையை ஏற்றுக் கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் கடைகளின் பெயர்கள் அடங்கிய பட்டியல் தரப்படுகிறது.

# கடன் அட்டை (Credit Card):

- ஒரு மாதத்தில் அதிகபட்சமாக கொள்முதல் செய்யும் தொகை அவ்வட்டை வைத்திருப்போருக்கு தெரிவிக்கப்படுகிறது.




# கடன் அட்டை (Credit Card):

- இவ்வட்டை வைத்திருப்பவர், பட்டியலிலுள்ள கடைகளில் பொருள் அல்லது சேவையை பெறும்பொழுது, இவர்கள் இவ்வட்டை செல்லுபடியாகும் காலம், அட்டை வைத்திருப்போரின் அடையாளம் மற்றும் கடன் அளவு இவற்றை சரிபார்க்கின்றனர்.



# கடன் அட்டை (Credit Card):

- பெறப்பட்ட பொருள் மற்றும் சேவைகள் பற்றிய விபரங்களை கடன் அட்டை ரசீதில் (Credit Card Voucher) குறிக்கப்படுகிறது.
- இவ்வாறு தயாரிக்கப்பட்ட ரசீதில் கடன் அட்டையின் உருவம் அச்சிடும் கருவி வழியாக மாற்றம் செய்யப்பட்டு அட்டைதாரரின் கையொப்பம் பெறப்படுகிறது



# கடன் அட்டை (Credit Card):

- இந்த ரசீதுகள், வங்கியரிடம் வழங்கப்படும்போது, வங்கியர் அவற்றை சரிபார்த்தபின், அட்டைதாரரின் கணக்கில் பற்று வைக்கிறார்.
- இதன்பிறகு, வங்கி அட்டைதாரரிடமிருந்து பொதுவாக 10 லிருந்து 15 நாட்களுக்குள் பணம் கட்டுமாறு வேண்டுகிறது.



# கடன் அட்டை (Credit Card):

- அட்டை வழங்கும் சில வங்கிகள் ரொக்கம் எடுக்கவும் அனுமதிக்கிறது.
- இச்சேவைக்கு அட்டைதாரர் சேவை கட்டணம் கட்ட வேண்டும்.
- இப்பொழுது, ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி ரொக்கம் எடுத்தலுக்கு மாதத்திற்கு 2.95 சதவீதம் வட்டி வசூலிக்கிறது.

